பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 10 2023 **FRIDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாதுகாப்பு தொடர்பான செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு இரண்டு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக, தேர்தல் ஆணையம் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டது.

3. மகளிர் கல்விக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்க பாடுபடுவோம் என்பதை முன்நிறுத்தி மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ளப்போவதாக அஇஅதிமுக தெரிவித்துள்ளது.

5. ஆசிய விளையாட்டு ஹாக்கிப்போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

---- *இனி விரிவான செய்திகள்* ----

<<<<<<<>>>>>>

பாதுகாப்பு தொடர்பான செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு இரண்டு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில், நக்சலைட் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் நக்சலைட் பிரச்சினை பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் மீண்டும் நக்சலைட்டுகள் தலைதூக்காமல் இருப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நக்சலைட்டுகளை அடுத்த இரண்டாண்டுகளுக்குள் முற்றிலுமாக ஒடுக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும், இதற்கு மாநில அரசுகள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நக்சலைட் பிரச்சினையால் உயிரிழப்பவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவியை 40 லட்சம் ரூபாயாக மத்திய அரசு உயர்த்தியிருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையம் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டது.

தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக்கூட்டத்தில், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், சட்டீஸ்கர், தெலங்கானா மற்றும் மிசோரம் மாநில சட்டப்பேரவைகளுக்கான தேர்தலை சுமூகமாக நடத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களின் காவல், செலவின மற்றும் பொது பார்வையாளர்கள் இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>>

ஆயுஷ்மான் பாரத் திட்டம் ஏழை மக்களுக்கு வரப்பிரசாதமாக திகழ்கிறது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த திட்டத்தின்மூலம் பயனடைந்த ஏழை மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டதை விளக்கும் காணொலியையும் வெளியிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

மகளிர் கல்விக்கு தமிழக அரசு முன்னுரிமை அளித்துள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு பொன்முடி கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் வீரபாண்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விலையில்லா மிதிவண்டிகளை மாணவர்களுக்கு வழங்கி அவர் பேசினார்.

தமிழகத்தில் ஆண்களைவிட, பெண்கள்தான் அதிகமாக கல்வி கற்பதாகவும் அவர் கூறினார்.

பெண் கல்வியை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

<<<<<<<>>>>>>

ஆவின் நிறுவனத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பால்வளத்துறை அமைச்சர் திரு மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆவின் நிறுவனத்தின் மூலம், தரமான பால் பொருட்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

இந்த நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காக இரண்டு கட்டங்களாக பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்க பாடுபடுவோம் என்பதை முன்நிறுத்தி மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ளப்போவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தின் வளர்ச்சிக்காக புதிய திட்டங்களை வழங்க வேண்டும், அதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும், சிறுபான்மையின மக்களுக்கு முழுமையான பாதுகாப்பு கிடைக்க வேண்டும் போன்றவற்றிற்காக அஇஅதிமுக பாடுபடும் என்றார்.

தமிழக அரசின் செயல்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் இல்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 12 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் தற்போது புழக்கத்தில் உள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவ்வங்கியின் கவர்னர் திரு சக்திகாந்த தாஸ், இதுவரை 3 லட்சத்து 43 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் திரும்பப்பெறப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை புழக்கத்தில் இருந்து திரும்பப்பெறுவதென கடந்த மே மாதம் 19-ஆம் தேதி அறிவிக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>>

அமைதிக்கான நோபல் பரிசு ஈரானை சேர்ந்த **Narges Mohammadi** –க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் உரிமைக்கு போராடியதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

<<<<<<<>>>>>>

மதுரையில் நடைபெறவுள்ள புத்தக கண்காட்சியின் முதல் நிகழ்வாக மதுரை வாசிக்கிறது என்ற நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இதில் மாணவர்கள் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார். எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். இதற்கிடையே, சென்னையின் பல்வேறு பகுதிகளில் இன்று பிற்பகல் பரவலாக மழை பெய்தது.

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

குன்னூர் பேருந்து விபத்தில் உயிரிழந்த தென்காசி மாவட்டத்தை சேர்ந்த 7 பேரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிவாரண உதவியை மாநில அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் இன்று வழங்கினார்.

--------------------

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அதிநவீன தொழில்பயிற்சி மையத்தை மாநில அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையாளர் திரு வீரராகவராவ் இன்று தொடங்கிவைத்தார்.

----------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் தேசிய வனவிலங்கு வாரத்தை முன்னிட்டு, மாணவர்களுக்கான போட்டிகளை ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன் இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

திண்டுக்கல் மாநகராட்சி சார்பில் டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை மேயர் இளமதி, இன்று தொடங்கிவைத்தார்.

-----------------------

தூத்துக்குடியில் உள்ள மாட்டு இறைச்சி கடையில் 150 கிலோ கெட்டுப்போன இறைச்சியை உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் இன்று பறிமுதல் செய்தனர்.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப்போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், 2 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் **Hangzhou** -வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் ஹாக்கியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

இறுதியாட்டத்தில் இந்தியா, ஜப்பானை 5-1 என்ற கோல் கணக்கில் வென்று இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இதன்மூலம், பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவும் இந்திய ஹாக்கி அணி தகுதி பெற்றுள்ளது.

வில்வித்தை போட்டியின் ஆடவர் குழு பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் குழு பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும் இந்தியா வென்றது.

ஆடவர் **Bridge** போட்டியிலும் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

மல்யுத்த போட்டியின், மகளிர் 62 கிலோ எடைப்பிரிவில் சோனமும், 76 கிலோ எடைப்பிரிவில் **Kiran Bishnoi**-யும், ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் **Aman Sahrawat** –யும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் பிரணாய், வெண்கலப்பதக்கம் வென்றார்.

மகளிர் **Sepaktakraw** போட்டியில் இந்தியாவிற்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

கபடி போட்டியில் இந்தியா ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானையும், மகளிர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் நேபாளத்தையும் வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியது.

கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 22 தங்கம், 34 வெள்ளி, 39 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 4-வது இடத்தில் நீடிக்கிறது.

--------------

உலக ஜுனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Tara Shah** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-8, 21-7 என்ற செட் கணக்கில், செக் குடியரசின் **Lucie Krulova** வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Ayush Shetty** -யும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

---------------

உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் - நெதர்லாந்து இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

ஹைதராபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், நெதர்லாந்து வெற்றி பெற 287 ரன் என்ற இலக்கினை பாகிஸ்தான் நிர்ணயித்துள்ளது.

முன்னதாக டாஸ் வென்ற நெதர்லாந்து முதலில் பந்துவீச தீர்மானித்ததையடுத்து பேட் செய்த பாகிஸ்தான் 286 ரன் எடுத்து 49 ஓவரிலேயே ஆட்டமிழந்தது.

**<<<<<<END>>>>>>**